**தலைப்பு 230 – சட்ட வரைஞர் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 230 – சட்ட வரைஞர் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 செப்தெம்பர் 13 ஆம் திகதி சட்ட வரைஞருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 158.65 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 88.13 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்தினது மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 70.52 மில்லியன் அதாவது 44.45 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 87.84 | 76.21 | 11.63 | 13.24 |
| மூலதனம் | 70.81 | 11.92 | 58.89 | 83.17 |
| மொத்தம் | 158.65 | 88.13 | 70.52 | 44.45 |

**2.2 முற்பணக் கணக்கு**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 23001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 4.0 | 1.6 | 1.5 | 2.3 | 19.0 | 9.9 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0138/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 13.99 மில்லியனாக இருந்தது.

**2.4 பொது வைப்புக் கணக்கு**

திணைக்களத்தின் கீழ்வரும் 02 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 73,135 கூட்டுமொத்தமாக இருந்தது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா |
| 6000/0000/00/0013/0067/000 | 66,985 |
| 6000/0000/00/0018/0059/000 | 6,150 |
| | 73,135 |

**2.5 கணக்காய்வு அவதானிப்பு**

சட்ட வரைஞர் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பில் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 செயலாற்றல்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கடமைகளின் தன்மை | 2015 சனவரி 01 இல் உள்ளவாறு வரைவு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களின் எண்ணிக்கை | ஆண்டின் போது தரப்பினர்களிடமிருந்து கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | மொத்தம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வரைவு தயாரிக்கப்பட்டு உரிய தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட எண்ணிக்கை | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வரைவு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களின் எண்ணிக்கை | நிறைவேற்ற வேண்டிய அளவில் சட்ட வரைவு தயாரிக்கப்பட்ட எண்ணிக்கையின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| கட்டளைச் சட்ட வரைவு தயாரித்தல் (ஆரம்ப மற்றும் திருத்த சட்டங்கள்) | 162 | 64 | 226 | 32 | 194 | 14.16 |
| பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரத்தியேக சட்டங்கள் | 82 | 12 | 94 | 05 | 89 | 5.32 |
| பிரமாணங்களைத் திருத்துதல் (உதவிச் சட்டங்கள்) | 124 | 129 | 253 | 129 | 124 | 50.99 |
| மாகாண சபைச் சட்ட விதிகள் | 19 | 04 | 23 | - | 23 | இல்லை |

2015 இல் காணப்பட்ட மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் வரைவு பூர்த்தி செய்யப்பட்டு உரிய தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட எண்ணிக்கை 5 சதவீதம் முதல் 51 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதுடன் மாகாண சபை சட்டவிதிகளின் வரைவு தயாரிக்கப்பட்டு உரிய தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்**

**3.2.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

சட்டங்கள், நியதிச்சட்டங்கள் திருத்த செயற்திட்டத்திற்காக ரூபா 185 மில்லியன் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அது 2017 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 2.76 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதிலுள்ள தாமதம், 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புபடுகின்ற உத்தியோகத்தர் நீக்கப்படாமையினால் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தாமதமாகியிருந்தது.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 37 | 25 | 12 |
| (ii) | மூன்றாம் நிலை | 28 | 03 | 25 |
| (iii) | இரண்டாம் நிலை | 62 | 30 | 32 |
| (iv) | ஆரம்ப நிலை | 24 | 22 | 02 |
| (v) | ஏனையவை | 04 | 04 | - |
| | மொத்தம் | 155 | 84 | 71 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடங்களின் எண்ணிக்கை 71 ஆக இருந்ததுடன், அதில் 06 சிரேஷ்ட உதவி சட்ட வரைவு வளவாளர்கள் வெற்றிடங்களும், 05 உதவி சட்ட வரைவு வளவாளர்கள் வெற்றிடங்களும், 23 மொழிபெயர்ப்பாளர்கள் வெற்றிடங்களும், 08 கூட்டிணைப்பாளர்கள் மற்றும் 13 ஆவணப்படுத்தல் உதவியாளர்களினதும் வெற்றிடங்களும் அவதானிக்கப்பட்டன. இந்த வெற்றிடங்களின் எண்ணிக்கை நிறுவனத்தின் செயலாற்றல் தொடர்பில் தாக்கமளித்திருந்தது.